**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை - 2023**

---------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம்,பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து சபை 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபையின் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ் கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில்

குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,
- சபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- சபை வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தாயரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) இலங்கை கணக்கீட்டு நியமம் 08 (எல்கேஎஸ் 08) இன் பந்தி 42 க்கு முரணாக, ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மற்றும் அருவ சொத்துக்களின் தேய்மானம் தொடர்பான முந்தைய ஆண்டு பிழைகள் ரூபா 2,949,214 தொகையானது | முன்னைய ஆண்டுடன் தொடர்புடைய 2023 இல் சரிசெய்யப்பட்ட தொகை ரூபா 2,949,214 ஆகவிருப்பதுடன் இது 2023.12.31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான அறிக்கையிடப்பட்ட வருமானத்தில் 0.41% மட்டுமே ஆகும். இதற்கு மேலதிகமாக, இது மொத்த விரிவான வருமானத்தில் | கணக்கீட்டு நியமங்களின் படி மீள்தொகையிடுவதன் மூலம் முந்தைய கால பிழைகளை சரிசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சரி செய்யப்பட்டிருந்தது. | 3.8% மட்டுமே ஆகும். எனவே, பொருண்மையின் அடிப்படையில், கூறப்பட்ட கொடுக்கல்வாங்கலை முந்தைய ஆண்டு கொடுக்கல்வாங்கல்களாக கருத வேண்டிய அவசியமில்லை. | |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ)ஒரு செயற்திட்டத்திற்கான திருப்பிச் செலுத்தப்படாத அரசாங்கப் பங்காக 1994 ஆம் ஆண்டு இலங்கை முதலீட்டுச் சபைக்கு மேற்கொள்ளப்பட்ட ரூபா 49,250,000 கொடுப்பனவொன்று நிதிக்கூற்றுக்களில் பங்குகளில் முதலீடொன்றாகக் காட்டப்பட்டுள்ளது. | ஈடீபீ இந்தப் பணத்தை திரும்பப் பெற முடியாததுடன் ஈடீபீ பொது திறைசேரியின் பொது முயற்சிகள் நிறுவனத்திடம் இருந்து ரூபா 49.25 மில்லியனை பதிவழிப்பதற்கு அனுமதி கோரியதுடன் 1994 ஜனவரி 25 இல் அமைச்சரவை துணைக் குழுவின் முடிவின்படி அரசாங்கத்தின் பங்களிப்பாக இருந்ததால், முன்னுரிமைப் பங்குகளில் முதலீடாகப் பதிவு செய்யப்பட்டது. | முதலீடுகள் துல்லியமாக கணக்கிடப்பட வேண்டும். |
| (ஆ)சபை ரூபா 13,150,000 இனை ஒரு தனியார் கம்பனியின் 1,413,772 பங்குகளின் முதலீடு செய்தததுடன் அப்பங்குகளின் சந்தைப் பெறுமதி 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிநிலைமைக் கூற்றுக்களில் ரூபா 158,639,356 ஆக காட்டப்பட்டிருந்தது. இருப்பினும், இது 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சந்தைப் பெறுமதியாகும். எனினும், பங்குகளின் சந்தைப் பெறுமதியின் கணிப்பீட்டிற்கான அடிப்படையின் துல்லியத்தன்மையை கணக்காய்வில் நிரூபிக்க முடிந்திருக்காமையால் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பங்குகளின் சந்தைப் பெறுமதி 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சந்தைப்பெறுமதிக்கு சமமானது என்பதை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியவில்லை. | 2023/12/31 இன் முதலீட்டு கம்பனியின் பங்குகளின் சந்தை பெறுமதியை முதலீட்டாளர் நிறுவனம் மற்றும் ஒத்த நிறுவனம் இரண்டும் 2023 ஆம் ஆண்டிற்கான நட்டத்தை அறிவித்ததால் தீர்மானிக்க முடியவில்லை. முதலீட்டுக் கம்பனியின் பங்குகளின் பெறுமதி காலக்கழிவிற்காக சோதிக்கப்பட்டதுடன் அறிக்கையிடல் நோக்கங்களுக்காக எடுக்கப்பட்ட பெறுமதியின் காலக்கழிவை பரிந்துரைக்க எந்த ஆதாரமும் இல்லை. எனவே, 2023/12/31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிநிலைமைக் கூற்றுக்களிற்காக அதே பெறுமதி அறிக்கையிடப்பட்டது. | பங்குகளின் சந்தை பெறுமதி ஏற்றுக்கொள் ளக்கூடிய முறைமையை ப் பயன்படுத்தி கணக்கிடப்பட வேண்டும். |

### 1.5.3 அங்கீகரிக்கப்படாத கொடுக்கல்வாங்கல்கள்

| அங்கீகரிக்கப்படாத கொடுக்கல்வாங்கல்களின் விபரம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ)பொது முயற்சிகள் திணைக்களத்திடமிருந்து கோரப்பட்ட அனுமதி வழங்கப்படாவிட்டாலும், பணியாளர் கடன் திட்டம் 4.2 சதவீத வட்டி விகிதத்தில் நான்கு வகை கடன்களைக் கொண்டதாக 1985 ஆம் ஆண்டு முதல் இயக்குநர்கள் குழுவின் அனுமதியின் கீழ் செயல்படுத்தப்பட்டு வருகிறதுடன் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊழியர்களுக்கான கடன்கள் ரூபா 41,554,053 ஆகவிருந்தது. | ஊழியர்களுக்கான கடன்கள் திட்டங்கள் 1985 ஆம் ஆண்டு முதல் சபையின் அங்கீகாரத்துடன் ஈடீபீ ஆல் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 08/2005 மற்றும் 26/97 போன்ற பொது நிர்வாக சுற்றறிக்கைகளின் அடிப்படையில் இந்த கடன்களுக்கு சபையின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 29.05.2007 அன்று, கடன் திட்டங்களைத் தொடர அப்போதைய ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சகத்தின் செயலாளரின் அனுமதியை ஈடீபீ பெற்றது. | சலுகை வட்டி விகிதத்துடன் கூடிய ஊழியர் கடன் திட்டங்களுக்கு பொது முயற்சிகள் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட வேண்டும். |
| (ஆ) நிரந்தரப் பதவியில் 25 ஆண்டுகள் நிறைவடைந்த ஊழியர்களுக்கு அவர்களின் பணி ஓய்வு அல்லது பணியிலிருந்து விலகும் போது, சபை அரை சவரன் தங்கக் காசுகளை பரிசாக வழங்கியதுடன் அதற்காக பொது முயற்சிகள் திணைக்களத்தின் அனுமதியின்றி மீளாய்வாண்டிற்காக ரூபா 595,600 செலவழிக்கப்பட்டிருந்தது. | ஈடீபீ இல் 25 வருட சேவையை முடித்த ஊழியர்களுக்கு, ஈடீபீ அவர்களின் பணியைப் பாராட்டும் வகையில், ஈடீபீ இல் நிரந்தரப் பதவியில் இருந்து ஓய்வு பெற்றவுடன் அல்லது ராஜினாமா செய்யும் போது அவர்களுக்கு அரை- சவரன் தங்க நாணயத்தை வழங்குகிறது. ஈடீபீ நலன்புரிச் சங்கத்தால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவைத் தொடர்ந்து, தலைவர்/சிரேஸ்ட நிறைவேற்று அதிகாரியின் அனுமதியுடன் இந்த நடைமுறை 2014 இல் தொடங்கப்பட்டது. 2023 இல் ஓய்வு பெற்ற தகுதியுடைய 7 ஊழியர்களுக்கு தங்க நாணயங்களை வழங்குவதற்காக ரூபா 595,600/- செலவழிக்கப்பட்டது. இதற்காக பொது முயற்சிகள் திணைக்களத்திடமிருந்து எந்த அனுமதியும் பெறப்படவில்லை | 25 ஆண்டுகள் நிறைவடைந்த ஊழியர்களுக்கு பரிசு வழங்கும் திட்டத்திற்கு பொதுத்துறை முயற்சிகள் திணைக்களத்தின் அனுமதி பெற வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாத ஆவணச் சான்றுகள்

| விடயம் | தொகை ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ)பங்குகளில் முதலீடு | 35,431,905 | பங்குச் சான்றிதழ்கள் | இந்த நிறுவனங்களின் நம்பகத்தன்மையை அதிகரிக்கவும், வங்கிகளிடமிருந்து கடன் வசதிகளைப் பெறவும் ஈடீபீ முதலீடு செய்தது. இருப்பினும், மூல பங்குச் சான்றிதழை கலைப்பாளரிடம் ஒப்படைத்தல் மற்றும் பங்குச் சான்றிதழ்கள் விசாரணையில் உள்ளன போன்ற காரணங்களால் கம்பனிகளின் பங்குச் சான்றிதழ்கள் கிடைக்கவில்லை | கணக்காய்விற்கு உரிய ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ)பங்கு முதலீட்டின் காலக்கழிவு | 35,273,710 | பங்குச் சான்றிதழ்கள் | | |

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ)சபையினால் ஏற்றுமதியாளர்களுக்காக வழங்கப்பட்ட ஏற்றுமதி கடன் தொகையில் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 146 ஏற்றுமதியாளர்களிடமிருந்து அறவிட வேண்டிய பணம் ரூபா 38,027,520 ஆகும். அந்த தொகையில் 96 சதவீதம் 25 வருடங்களுக்கு மேலாக அறவிடப்பட்டிருக்கவில்லை. | இந்த எஞ்சியிருக்கும் ஏற்றுமதியாளர்களில் பெரும்பாலோர் பல்வேறு எதிர்பாராத சவால்களால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் சமீப காலமாக நமது நாடு எதிர்கொண்டுள்ள சாதகமற்ற பொருளாதார நிலைமை காரணமாக எதிர்பார்த்தபடி தங்கள் திட்டங்களைச் செயல்படுத்த முடியாமல் போகலாம். இத்தகைய சூழ்நிலைகளின் கீழ், மதிப்பாய்வு செய்யப்பட்ட காலப்பகுதியில் ஈடீபியால் மீட்பு நடவடிக்கைகளை திறம்பட மேற்கொள்ள முடியவில்லை. | ஏற்றுமதி கடன் மீதிகளை அறவிடுவதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) 07 வருடங்கள் முதல் 25 வருடங்கள் வரையான காலப்பகுதியில் 07 நிறுவனங்களிடமிருந்து சேவைகளைப் பெறுவதற்காக செய்யப்பட்ட ரூபா 901,000 வைப்புத்தொகையை சபை அறவிட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டில் சிறப்புப் பணியின் மூலம் திரும்பப்பெறக்கூடிய வைப்புத் தொகைகளில் பெரும்பாலானவை சேகரிக்கப்பட்டன. இருப்பினும், ஒரு காலக்கழிவு ஒதுக்கீடு ரூபா 884,949 பல்வேறு காரணங்களால் திரும்பப்பெற முடியாத அந்தத் திரும்பப்பெறக்கூடிய வைப்புத்தொகைகளுக்காக இப்போது பராமரிக்கப்படுகிறது. | சேவைகளைப் பெறுவதற்காகச் செலுத்தப்பட்ட வைப்புத் தொகையை மீளப் பெறுவதற்கு துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ)ஊவா பரணகம ஏற்றுமதி உற்பத்தி கிராமங்கள் (யூபிஈபிவீ) செயற்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட ரூபா10,403,683 14 வருட காலப்பகுதிக்கு மேலாக மீளப் பெறுவதற்கு சபை தவறிவிட்டது. | ஊவா பரணகம ஏற்றுமதி கிராம கம்பனி உற்பத்தியாளர்களிடமிருந்து பொருட்களை சேகரித்து செயற்திட்டத்தில் ஈடுபட்டுள்ள ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கியது. ஈடீபி ஏற்றுமதி நிறுவனங்களிடமிருந்து விற்பனை வருவாயை சேகரித்து, திறைசேரிக்கு செலுத்த வேண்டிய கடன் தவணைகள், வழங்கப்பட்ட தயாரிப்புகளுக்கான விவசாயிகளுக்கான கொடுப்பனவுகள் மற்றும் நிர்வாக மற்றும் பிற செலவுகளுக்கு தேவையான நிதியை கம்பனிக்கு செலுத்துவது போன்றவற்றிற்காக அனுப்பியது. இந்தப் கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்ய, ஒரு கட்டுப்பாட்டுக் கணக்கு பராமரிக்கப்பட்டதுடன் அதில் இறுதி வரவு இருப்பு ரூபா 10,403,683 மீதமாகவுள்ளது. மீட்புக்கான பின்தொடர்தல் நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | விவசாயிகளிடம் இருந்து நிலுவைத் தொகையை உடனடியாக அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ)சபையானது 10 ஆண்டுகளிற்கு மேலாகவுள்ள ஏனைய கடன்பட்டோர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 7,230,203 தொகையை அறவிடுவதற்கு தவறியிருந்தது. | இது ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்படும் நிதி உதவியின் மீதமுள்ள பகுதியைக் குறிக்கிறது. தற்போது மூடப்பட்டுள்ள கடனாளி நிறுவனங்களின் இயக்குநர்களுக்கு எதிராக ஈடீபியின் சட்டப் பிரிவு சட்ட நடவடிக்கை எடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. | கடன்பட்டோர்களிட மிருந்தான நிலுவைத் தொகையை உடனடியாக அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2015 மே 25 ஆம் திகதிய 01/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | சபை போக்குவரத்துக் கொடுப்பனவுக்குத் தகுதியில்லாத எம்எம், பீஎல், எம்ஏ மற்றும் ஜேம் சம்பளப் பிரிவுகளின் கீழுள்ள சபையின் 162 ஊழியர்களுக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 13,975,608 போக்குவரத்துப் படியாக செலுத்தியிருந்தது. | எம்எம், ஜேம், எம்ஏ மற்றும் பீஎல் பிரிவுகளில் உள்ள ஊழியர்களுக்கு 2023 ஆம் ஆண்டில் மொத்தம் ரூபா 13,975,608 போக்குவரத்துக் படிகளை சபை செலுத்தியது. 2022 திசெம்பர் 01 திகதியிடப்பட்ட சபை தாள் எண். 2022/11/532 வழங்கிய அனுமதியின் பிரகாரம் வருகையின் | பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளைப் பின்பற்றி போக்குவரத்து கொடுப்பனவுகள் செலுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அடிப்படையில் மாதாந்திர போக்குவரத்துக் கொடுப்பனவு வழங்கப்பட்டது. | |
| (ஆ)நிதிப் பிரமாணங்கள் 756(6) | பொருள் கணக்கெடுப்பு சபை அறிக்கையை அடுத்துவரும் வருடம் யூன் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்பிக்க வேண்டியிருந்த போதிலும், இந்த அறிக்கை திகதி வரையிலும் சபையின் பொருள் கணக்கெடுப்பு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்படவில்லை. | பொருள் கணக்கெடுப்பு தற்போது நிறைவடைகிறதுடன் அறிக்கை 2023 யூலை 31 க்கு முன் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்படும். | நிதிப்பிரமாணங்களின் படி பொருள் கணக்கெடுப்பு சபை அறிக்கையை கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்பிக்கப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 77,657,726 மிகையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 314,329,241 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 236,671,515 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. ஏனைய விரிவான வருமானங்கள் ரூபா 101,580,956 ஆல் குறைவடைந்தமை மற்றும் முதலீட்டிற்கான காலக்கழிவு ஏற்பாடுகள் மற்றும் வருமதிகள் ரூபா 139,996,919 ஆலும் அதிகரித்தமை என்பன இவ் வீழ்ச்சிக்கு பிரதானமாக பங்களித்திருந்தன.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையானது அதன் உரிமை இல்லாத ஒரு நிலம் மற்றும் வாரியம் அமைந்துள்ள கட்டிடத்தின் மாடிகளை வாடகைக்கு எடுப்பதற்காக 2 மதிப்பீட்டு அறிக்கைகளைப் பெறுவதற்காக மீளாய்வாண்டில் ரூபா 1,043,150 தொகையை ஏற்படுத்தியிருந்தது. | டீஎச்பீஎல் இன் பங்குகளை மூல நிலைக்கு அதிகரிப்பதற்கு எஸ்எல்ஈடீபீ இயலக்கூடிய வகையில் டீஎச்பீஎல் பங்குகளின் கொள்முதல் விலையை பேரம்பேசுவதற்காக ஈடீபி க்கு இது தேவைப்பட்டது. ஈடீபீ மதிப்பீட்டுக் கட்டணமாக ரூபா 2,368,120 செலுத்தியதுடன் என்டீபீ மற்றும் டீஎச்பீஎல் இடையேயான குத்தகை ஒப்பந்தத்தை புதுப்பிக்கத் தேவையான மாடிகளின் வாடகை மதிப்பைத் தீர்மானிக்க, தேசிய அபிவிருத்தி வங்கியின் மதிப்பீட்டு அறிக்கையின் தகவல்கள் பயன்படுத்தப்படுவதால், ஈடீபி நிர்வகிக்கிறது. தேசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ரூபா 1,324,970 பெறவும் முகாமை செய்தது. எனவே, இந்த நோக்கத்திற்காக ஈடீபீயால் செய்யப்பட்ட உண்மையான செலவு ரூபா 1,043,175 ஏற்படுத்தப்பட்டிருந்தது. | சபையின் உரிமையில்லாத சொத்துக்கள் மீது சபை செலவீனங்களை ஏற்படுத்தக்கூடாது. |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபை முதலீடு செய்த நிறுவனங்களின் நிலைத்திருக்கும் தன்மை தொடர்பாக தொடர்ச்சியான கண்காணிப்பு நடைமுறைகள் போதுமானதாக இல்லாததால், கம்பனிப் பதிவேட்டில் இருந்து பதிவழிப்புச் செய்யப்பட்ட 26 கம்பனிகளின் பங்குகளில் செய்யப்பட்ட ரூபா 40,217,028 முதலீட்டைத் திரும்பப் பெற சபை தவறிவிட்டது. | கம்பனி சட்டத்தில் ஏற்படுத்தப்படும் புதிய விதிகளின்படி, அந்த நிறுவனங்களில் முதலீடு செய்யப்பட்ட தொகையை, அரசால் பெற்ற சொத்துக்களில் இருந்து பெறுவதற்கான நடவடிக்கையை, சபை மேற்கொள்ளும். சபை இன்னும் பாதிக்கப்பட்ட நிறுவனங்களின் இயக்குநர்கள் பற்றிய தகவல்களைச் சேகரித்து, அவர்களுடன் கலந்துரையாடி, இந்தத் தகவலை சபையின் பதிவேடுகளில் ஒருங்கிணைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. | சபை முதலீடு செய்த நிறுவனங்களின் நிலைத்திருக்கும் தன்மை தொடர்பிலான பின்தொடர் நடைமுறைகள் பயனுள்ள மற்றும் திறமையான முதலீட்டு முடிவுகளை எடுப்பதற்காக மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.3 செயற்பாட்டு வினைத்திறமையீன்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டிற்கான முடிக்க செயல்நடவடிக்கைத் திட்டத்தில் திட்டமிடப்பட்ட 30 நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம் 10 சதவீதத்திலிருந்து 50 சதவீதமாக இருந்தது. | தூதரகங்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களிடமிருந்து பதில்கள் இல்லாமை, செயல்படுத்துவதற்கான அதிக செலவை ஈடுகட்ட பாதீடுகள் போதுமானதாக இல்லை, செயல்படுத்துவதற்கான நேரக் கட்டுப்பாடுகள், களப் பார்வைகளுக்கான தடைகள் போன்ற பல்வேறு காரணங்களால் இது ஏற்படுகிறது. | பாதிப்பை ஏற்படுத்தும் அனைத்து விடயங்களையும் பரிசீலித்து செயல்திட்டம் தயாரிக்கப்பட்டு, செயல்திட்டத்தின் செயற்பாடுகள் திட்டமிட்டபடி செயற்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ)ரூபா 16.487 மில்லியன் கிரயத்துடன் 81 ஏற்றுமதியாளர்கள் பங்குபற்றிய 07 ஏற்றுமதி ஊக்குவிப்பு நிகழ்வுகளின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு போதுமான பின்தொடர்தல் நடைமுறைகளை சபை எடுக்கவில்லை. | நிகழ்ச்சித்திட்டம் மற்ற தரப்பினரால் ஏற்பாடு செய்யப்பட்டமை, பங்கேற்பாளர்களால் முன்னேற்ற அறிக்கைகள் கோரப்பட்ட போதிலும் சமர்ப்பிக்கப்படமை, நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் ஈடீபீ அதிகாரிகள் இல்லாதது போன்ற பல்வேறு காரணங்களால் இது ஏற்படுகிறது. | ஏற்றுமதி ஊக்குவிப்பு நிகழ்வுகளின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு போதுமான பின்தொடர்தல் நடைமுறைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முதுநிலை நிர்வாக மட்டத்தில் 14 இல் 06 பதவிகளும், நடுத்தர முகாமைத்துவ மட்டத்தில் 64 இல் 23 பதவிகளும், இளநிலை முகாமைத்துவ மட்டத்தில் 44 இல் 14 பதவிகளும், சபையின் எம்ஏ மற்றும் பிஎல் தரங்களில் 126 இல் 46 பதவிகளும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெற்றிடமாகவிருந்தது. | நாட்டில் நிலவும் நிலைமைகளின் கீழ், 2023 ஆம் ஆண்டில் வெற்றிடங்களை நிரப்புவதற்காக பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு சுற்றறிக்கைகள் மூலம் அவ்வப்போது பல விதிமுறைகள் விதிக்கப்பட்டன. இருப்பினும், 2024 ஆம் ஆண்டில், ஈடீபீ இன் அத்தியாவசிய வெற்றிடப் பதவிகளை முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் அனுமதியைப் பெறுவதன் மூலம்நிரப்ப நடவடிக்கை எடுத்துள்ளது. | சபையின் நோக்கங்களை அடையும் வகையில் அத்தியாவசிய வெற்றிடப் பதவிகளை நிரப்பப்பட வேண்டும். |